பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 135 நாள்: 24.09.2016

<u>மாவட்ட தேர்தல் அலுவலகம், சென்னை மாவட்டம்</u>

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள், 01.01.2017—ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு 2017—ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்க முறை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சுருக்க முறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல்கள் கடந்த 01.09.2016 அன்று வெளியிடப்பட்டு பொதுமக்கள் தங்களது பெயர்கள் மற்றும் குடும்பத்தாரர்களது பெயர்கள் குறித்த விபரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா என்பது குறித்து சரிபார்த்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காமல் உள்ளவர்கள் மற்றும் 01.01.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்கள் (அதாவது 01.01.1998 ஆம் தேதிக்கு முன்பாக பிறந்தவர்கள்) படிவம் 6 —ஐ பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம் 7—ஐ பூர்த்தி செய்தும், பதிவுகளில் திருத்தம் தொடர்பாக படிவம் 8—ஐ பூர்த்தி செய்தும், ஒரே சட்ட மன்ற தொகுதிக்குள் இடம் பெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 8-A யினை பூர்த்தி செய்தும் அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும் வாக்காளர் பதிவு அலுவலர் / சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் 30.09.2016—ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக 25.09.2016 (ஞாயிற்று கிழமை) அன்று வாக்கு சாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. அவ்வமயம் பொது மக்கள் உரிய படிவங்களை பெறவும், பூர்த்தி செய்த படிவங்களையும் சிறப்பு முகாம் நடைபெறும் இடங்களில் சேர்ப்பிக்கவும் செய்யலாம். மேலும் பொது மக்கள் இணையதளம் மூலமாகவும் பெயர்கள்

சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் தொடர்பாகவும் விண்ணப்பிக்கலாம். (இணையதள முகவரி – www.elections .tn.gov.in). பொதுமக்கள் யாவரும் இந்த இணையதள சேவையினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம், நீக்கம் ஆகியவைகளை மேற்கொள்ள கோரப்படுகிறார்கள்.

ஜனநாயகத்தினை வலுப்படுத்த, தகுதியுள்ள அனைத்து பொது மக்களும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற ஏதுவாக, வரைவு வாக்காளர் பட்டியலினை பார்வையிட்டு, 25.09.2016 அன்று காலை 9.30 மணி முதல் 5.30 மணி வரை நடைபெறும் சிறப்பு முகாமில் பங்கேற்று புதிய வாக்காளர்களின் பெயர்களை சேர்த்தும் வாக்காளர் பட்டியலை சரிசெய்ய ஏதுவாக வாக்காளர் பட்டியல்கள் சிறப்பு சுருக்க திருத்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி